**S.C. No.422/2017**
**P.W.–1 திரு.பாண்டிச்சாமி**
**நாள் – 02.06.2025**

(1, 2, 4, 5 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி இறந்துவிட்டார். )

**1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் வீடியோகிராப் சம்பந்தமாக படித்துள்ளேன். அந்த விவரத்தை நான் போலிசார் விசாரணையின் போது சொல்லவில்லை. நான் பாக்கெட் டயரி பராமரிப்பது வழக்கம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமான விவரங்களை நான் பாக்கெட் டயரியில் குறித்துள்ளேன். ஆனால் நான் விசாரணையின் போது, அதை ஆய்வாளரிடம் காட்டவில்லை. எங்களுக்கு தினமும் காவல் நிலையத்தில் ரோல்கால் நடத்தப்படும் என்றால் சரிதான். ஆனால் நான் நுண்ணறிவு பிரிவில் பணிபுரிந்து வந்தேன். கடந்த 03.01.2016 ம் தேதி மேற்படி எங்கள் காவல் நிலையத்தில் காலை 7 மணிக்கு ரோல்கால் நடத்தப்பட்டது. நாங்கள் பணிக்கு வருகை புரிந்தது தொடர்பாக உத்தேச பணிப்பதிவேட்டில் குறிக்கப்படும் என்றால் சரிதான். என்னுடைய பணி சம்பந்தப்பட்ட விவரங்கள் காவல் நிலைய பொது நாட்குறிப்பில் குறிக்கப்படும் என்றால் சரிதான். நான் சம்பவ தினத்தன்று என்ன மாடல் கேமரா வைத்திருந்தேன் என்ற விவரத்தை புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வைத்திருந்த வீடியோ கேமரா நுண்ணறிவு பிரிவிலிருந்து கொடுக்கப்பட்டது. மேற்படி நுண்ணறிவு பிரிவானது காவல்துறை ஆணையாளர் அவர்களால் நேரடியாக கண்காணிக்கப்படும் துறை என்றால் சரிதான். நுண்ணறிவு பிரிவிலிருந்து ஒரு பொருளை எடுக்க வேண்டுமென்றால் அங்கு பராமரிக்கப்படும் சம்பந்தப்பட்ட பதிவேட்டில் குறிப்பு செய்ய வேண்டுமென்றால் சரிதான். நான் மேற்படி கேமராவை பெற்றுக்கொண்டதற்கு சம்பந்தப்பட்ட பதிவேட்டில் குறிப்பு செய்துள்ளேன். மேற்படி கேமராவில் பேட்டரி, மெமரி கார்டு மற்றும் கேசட் இருந்தது. மேற்படி உடைந்து போன கேமராவை நான் காவல் நிலையத்தில் ஒப்படைக்கும் போது அந்த கேமராவிலுள்ள மெமரி கார்டு, பேட்டரி

மற்றும் கேசட் ஆகியவை உடைந்து போன கேமராவை நான் கீழிலிருந்து எடுக்கும் போது இல்லாததால் அவற்றை நான் காவல் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை. மேற்படி உடைந்து போன கேமராவை காவல் நிலையத்தில் ஒப்படைக்கும் போது மதியம் சுமார் 2 லிருந்து 02.30 மணி இருக்கும். நான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கும் போது, அங்கு காவலர்களும் எதிரிகளும் இருந்தார்கள். நான் மேற்படி உடைந்து போன கேமராவை காவல் நிலையத்தில் ஒப்படைக்கும் போது அதற்குரிய படிவத்தை நிரப்பி கையொப்பம் பெற்றார்கள். திடீர் நகர் காவல் நிலையத்திற்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் இடையே சுமார் 3/4 கி.மீ தூரம் இருக்கும். வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுடைய பிறந்தநாளை முன்னிட்டு அவருடைய திருவுருவ சிலைக்கு மாலை அணிவிப்பதற்காக பல ஊர்களிலிருந்து மக்கள் வந்திருந்தார்கள் என்றால் சரிதான். அன்றைய தினத்தில் மேற்படி சிலையை சுற்றி சுமார் 1000 அல்லது 2000 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சுமார் 500 நபர்கள் இருந்தார்கள். அந்த சிலை இருக்கும் இடம் மதுரையின் மத்திய பகுதி மற்றும் பல்வேறு பகுதிகளுக்கு செல்லக்கூடிய வாகனங்கள் அந்த வழியாக வரும் என்றால் சரிதான். அன்றைய தினத்தன்று மேற்படி கட்டபொம்மன் திருவுருவ சிலை இருக்கும் பகுதியில் சட்டவிரோதமான நபர்களோ அல்லது வாகனங்களோ உள்ளே நுழையக்கூடாது என்று காவல் துறை ஆணையாளர், மதுரை அவர்கள் மதுரை மாநகர் எல்லைக்குட்பட்ட பகுதியில் தடை உத்தரவு பிறப்பித்திருந்தார். மேற்படி சிலையை சுற்றி நான்கு திசைகளிலும் போலிசார் பாதுகாப்பிற்காக போடப்பட்டிருந்தார்கள் என்றால் சரிதான். அது போல் சிலைக்கு மரியாதை செய்பவர்கள் வருவதற்கு வசதியாக பேரிகார்டுகள் போடப்பட்டது எனறால் சரிதான். அன்றைய தினத்தன்று கட்டபொம்மன் திருவுருவச்சிலைக்கு அருகில் காவலர்கள் பூட்ஸ் கால் அணிந்து பாதுகாப்பு பணியில் ஈடுபடக்கூடாது என்று ஒரு தரப்பினர் கோஷம் எழுப்பினர் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அது போல், அந்த கூட்டத்தில் போலிசார் எதற்காக தடியடி

நடத்தினார்கள் என்று குறிப்பாக எனக்கு தெரியாது. சா.பொ.1 வீடியோ கேமரா சம்பவ தினத்தன்று இயங்கும் நிலையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அது போல், சா.பொ.1 வீடியோ கேமரா நுண்ணறிவு பிரிவிற்கு சம்பந்தப்படாதது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்காக சா.பொ.1 வீடியோ கேமரா வேறு இடத்திலிருந்து வாங்கி பயன்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சா.பொ.2 கற்களுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அது போல், சா.பொ.3 காருக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் கிடையாது என்றும், அந்த கார் சிலை அருகில் வந்திருக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட அனைத்தும் எதிரிகளையும் எனக்கு சம்பவத்திற்கு முன்பு தெரியுமா என்றால் இறந்து போன 3வது எதிரி வீரக்குமாரை மட்டும் பொது இடங்களில் ஒட்டியுள்ள போஸ்டரில் பார்த்துள்ளேன். நான் புகாரில் எனக்கு ஏற்கனவே இறந்து போன 3வது எதிரி வீரக்குமாரை தெரியும் என்று குறிப்பிட்டுள்ளேன். மருத்துவரிடம் ஏற்கனவே எனக்கு தெரிந்த நபர்கள் தான் சம்பவத்தை நிகழ்த்தியதாக நான் சொல்லவில்லை. எதிரிகளின் பெயர்கள் காவல் நிலையத்தில் வைத்து போலிசார் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் வாகனத்தில் எதிரிகளை ஏற்றிச்செல்லும் போது விசாரித்து தெரிந்துகொண்டேன். போலிசார் தடியடி நடத்தியதால், கூட்டத்தில் இருந்த மக்கள் கற்களை வீசி எறிந்தார்கள் என்றும், தடியடி நடத்தியதால் சிலைக்கு மரியாதை செய்ய வந்திருந்த நபர்களை பிடித்து பொய்யாக இந்த வழக்கில் சம்பந்தப்படுத்தியிருக்கிறோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

**<u>2, 4 மற்றும்  5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 2, 4 மற்றும் 5 எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.